பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 28 திங்கட்கிழமை 14.10.2024 கதிர் 341

**இனிது ரகசியம் அல்ல!**

தமிழ்அரசுக்கட்சியின்நேற்றைய வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திற்கு நல்ல கூட்டம். கடும் மழைக்கு மத்தியிலும் தந்தை செல்வா கலை அரங்கம் நிறைந்திருந்தது. ☞2

## பல இடங்கள் வெள்ளத்தில்

பலத்த மழையுடனான வானிலையினால் நாட்டின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் பல பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தனகலு ஓயா தூனமலே பகுதியில் வெள்ளமட்டத்தைஅண்மித்துள்ளது. ☞8

## சில பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற வானிலை காரணமான வெள்ளம், நிலச்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொழும்பு வலயத்திற்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்படுவதோடு, கம்பஹா மற்றும் களனி கல்வி வலயங்களுக்குட்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் கொலன்னாவை மற்றும் கடுவல வலயக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கும் இன்று மற்றும் நாளை ஆகிய இரு தினங்களிலும் பாடசாலை விசேட ☞2

### கூட்டமைப்பு என்ற பெயரை களவாடிய பின்னர்

# சங்கை திருடியவர்களுக்கு தகுந்த பாடம் புகட்டவேண்டும்

### தமிழ் அரசின் வேட்பாளர் அறிமுக உரையில் சுமந்திரன் வலியுறுத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரைத் திருடியவர்கள் இப்போது சங்குச் சின்னத்தைத் திருடிவிட்டார்கள். அவர்களுக்குமக்கள்தேர்தலில்தகுந்தபாடம் படிப்பிக்கவேண்டும்என்று இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்தின் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்நடைபெற்றதமிழ்அரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் இருந்தும், கிழக்கில் இருந்தும் ஒரு அணியாகச் செல்லக்கூடிய ஒரேயொரு கட்சி தமிழ் அரசுக் கட்சி தான். அதனால்தான்இலங்கைத்தமிரசுக்கட்சியைப் பலப்படுத்துமாறு ஆணை கோருகின்றோம்.

தமிழ் அரசுக் கட்சியில் இருந்து யார் செல்கின்றார்கள் என்பது அல்ல முக்கியம். வீட்டுச்சின்னத்துக்கு வாக்களித்து கட்சியைப் பலப்படுத்துவதே முக்கியமானது. ☞2

## அரங்குகொள்ளாத மக்களுடன் தமிழ் அரசுக் கட்சிப் பரப்புரை



இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் யாழ்ப்பாணதேர்தல்மாவட்டவேட்பாளர்




அறிமுக நிகழ்வு தந்தை செல்வா அரங்கு கொள்ளாத மக்கள் கூட்டத்துடன் ☞2

## பொதுக் கட்டமைப்பு தற்போது இல்லை 'சங்கு' சின்னத்தை பெற்றது அறமில்லை

### பொதுச் சபையைச் சேர்ந்த பிரதிநிதிகள் விளக்கம்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்திய தமதிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு தற்போது இல்லை என்று அந்தப் பொதுக்கட்டமைப்பின் தலைமைப் பீட உறுப்பினரான நிலாந்தன் தெரிவித்தார். தேச திரட்சியை உருவாக்க முயன்று வெற்றி கண்டு சில நாட்களில் அது சிதறுண்டு போயுள்ளது. அதற்காக நாம் மக்களிடம் மன்னிப்புக் கோருகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் பொதுச்சபை ஜனாதிபதி தேர்தலைகையாண்டதுபோன்று,மற்றைய தேர்தல்களை கையாள முடியாததால் நாடாளுமன்ற தேர்தலில் இருந்து விலகி இருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் பாவித்த சங்கு சின்னத்தை பாவிக்க வேண்டாம் என கோரினோம். கட்சிகள் விரும்பி இருந்தால் சங்கு சின்னத்தைஎடுக்காதுஇருந்து இருக்கலாம். அதனையும் மீறி எடுத்துள்ளார்கள்.

சங்குசின்னத்திற்கும்,தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும், பொது கட்டமைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

தமிழ் மக்கள் ☞2

## முன்னாள் அமைச்சர்களின் சொத்துகள் மீது விசாரணை

முன்னாள் அமைச்சர்கள் பலரால் சொத்துக்கள் எவ்வாறு பெறப்பட்டன என்பது தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, முன்னாள் அமைச்சர்களான அனுப பெஸ்துவல் மற்றும் ஜோன்ஸ்டன் ☞2

## சாராய அனுமதி பெற்ற எம்.பிக்கள் விவரங்களை வெளியிட முடியுமா?

### அநுரகுமார ஆட்சிக்கு சுமந்திரன் பகிரங்கச் சவால்

ரணில்விக்கிரமசிங்கவின்ஆட்சியில் ஜனாதிபதித்தேர்தலில்தனக்கு அரசியல் ஆதாயம்தேடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சராயக் கடைகளுக்கான அனுமதி விவரத்தை முடிந்தால் வெளியிடுங்கள் என்று பகிரங்கச் சவால் விடுத்தார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் சுமந்திரன்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து ☞2

## 70 ஆண்டுகளாக ஏமாற்றியோரை தமிழ் மக்கள் தவிர்க்கவேண்டும்

### வேட்பாளர் அங்கஜன் கோரிக்கை

தமிழ் மக்கள் தம்மை 70 ஆண்டுகளாகஏமாற்றியவர்களைத் தவிர்த்து எதிர்காலத்தில் இருப்பினை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளைஎடுக்கவேண்டும். அதற்குரியதகமையைக்கொண்டுள்ள ஜனநாயக தேசிய கூட்டணியை பலப்படுத்தவேண்டும் என்று ஜனநாயக தேசிய கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட ☞2

## தமிழர் வாக்குகளை உடைப்பதுதான் லைகா நிறுவன கட்சியினது நோக்கம்

### வேட்பாளர் இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

தமிழ் மக்களின் வாக்குகளை உடைப்பதுதான்லைகாநிறுவனத்தின் கட்சியின் நோக்கம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அட்டனில்நேற்றுநடைபெற்றஐக்கிய மக்கள்சக்தியின்பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

லைக்காநிறுவனம்இலங்கையில் உருவாக்கியுள்ள லைக்கா புரடக்ஷன் நிறுவனத்தின் மூலம் திரைப்படம் எடுப்பதற்காகரஞ்சன்ராமநாயக்கவைப் பயன்படுத்துகின்றார்கள். அதற்காக அவருக்கு தலைமையை வழங்கி கட்சியொன்றையும் உருவாக்கியுள்ளார்கள்.

அந்தக் கட்சியின் உண்மையான நோக்கம் தமிழ் பகுதிகளில் உள்ள வாக்குகளை உடைப்பதுதான். அந்தக் கட்சியைப் பொறுத்தவரையில் வெல்வது நோக்கம் அல்ல. அந்தக் கட்சியின்வேட்பாளர்கள்எதிர்க்கட்சியில் இருப்பதைக் கூட நோக்கமாகக் கொள்ளவில்லை. மற்றைய கட்சிகள் பெறும் வாக்குகளை எவ்வாறு உடைக்கலாம் என்பதுதான் அதன் நோக்கமாக உள்ளது.

மலையக மக்களின் வாக்குகளைப் பெற்று ☞8

## தமிழ் அரசுக் கட்சியைவிட்டு ஒருபோதும் போகமாட்டேன்

### வேட்பாளர் சிறீதரன் அடித்துச் சத்தியம்

தமிழ் அரசுக் கட்சியைவிட்டு ஒருபோதும்போகமாட்டேன்என்று அந்தக் கட்சியின் யாழ்.மாவட்ட தலைமைவேட்பாளர்சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கிலே நாங்கள் 15 நாடாளுமன்ற ஆசனங்களை வென்றால் இந்தக் களம் எமக்கு மாற்றத்தைத்தருகின்றஒருகளமாக மாறும். தவறினால், எமது மக்கள் சரியான முடிவுகளை எடுக்கத் தவறினால் நாம் தோற்றுப்போன இனமாக மாறிக்கொண்டே இருப்போம். எங்களிடம் உள்ள இயலுமைகள் எம்மைவிட்டுப் போய்க்கொண்டே இருக்கும்.

எம்மீது விமர்சனங்கள் உண்டு, பேச்சு, ஏச்சு உண்டு. இங்குஇந்தக்கூட்டத்தின்தலைவர் பேசும்போது சொன்னார், சிறீதரன் கட்சியைவிட்டுப்போய்விடுவாரோ என்று நான் நினைத்தேன் என்று. நான் ஒரு காலமும் ☞2

## இனி இது .....

கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் பலரும் அழைத்துவரப்பட்டவர்கள்தான். இருந்தாலும் அதைப் பார்த்தே மற்றக் கட்சிகள் ஆடிப் போயிருக்கின்றன. இனித் தாங்களும் கூட்டம் போட்டால் எப்படியாவது மண்டபம் நிறைய ஆட்களைத் திரட்டியாகவேண்டுமே என்று திகைத்துப் போயிருக்கின்றனவாம். அதனால் தமிழ் அரசுக் கட்சிக் கூட்டத்திற்கு வந்தவர்கள் எல்லாம் காசு கொடுத்து அழைத்து வரப்பட்டவர்கள் என்ற கதையை நேற்று மாலையே கட்டவிழ்த்துவிட்டார்கள். மக்களை அழைத்து வர பஸ் உரிமையாளர்களே முகவர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்றும் கதை கட்டிவிட்டிருந்தார்கள். கூட்டங்களில் மக்களைத் திரட்டிக் காட்டி திரட்டிக் காட்டியே தேசிய மக்கள் சக்தியும் ஜனாதிபதித் தேர்தலில் வென்றது போன்று தமிழ் அரசுக் கட்சியும் கடைசியில் பெரு வெற்றியைப் பெற்றுவிடுமோ என்பதுதான் இப்போது எதிர்க் கட்சிகளின் அச்சம்.

நேற்றைய கூட்டத்தில் முன்னாள் ஆசிரியரும், பதில் அதிபராக இருந்தவரும், 41 வயதில் அந்தப் பணியை விட்டுவிட்டு அரசியலுக்கு வந்தவருமான தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர், பேசும் போது தனக்கு பெருக்கல் வாய்ப்பாடு வராது என்பதைக் காட்டிவிட்டார் என்பது ஒரு குறை. 500க்கு வெறும் 4 குறைவாக 496 பேர் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகிறார்கள் என்று கூறினார். அத்தோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை ஏதோ தெரியாமல் மறந்துபோய் சொல்லிவிட்டார் என்று கடந்துபோயிருக்கலாம். ஆனால் கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் என்று 44 அரசியல் தரப்புக்கள் களத்தில் இருக்கின்றன என்பதையும் மிகச் சரியாக உடனேயே சொன்னார். அப்ப (44யீ9) 396 தானே வரும். எப்படி 496 வந்தது? நல்லவேளை 15 வருடங்கள் பிள்ளைகள் தப்பிவிட்டார்கள்.

..................

ரணில் ஆட்சியில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தவரான ராஜபக்சக்களின் நெருங்கிய சகா ஹெகலிய ரம்புக்வெலவை வாசகர்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அண்மையில் மருந்துக் கொள்வனவு மோசடி தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு நீண்ட நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர். அவர் சிறைக்குள் தள்ளப்பட்டதின் பின்னர் மக்கள் அவரை மறந்தேபோய்விட்டார்கள்.

இப்போது திடீரென, தனக்கெதிரான வழக்கில் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும்வரையில் தான் அரசியலில் இருந்து தற்காலிகமாக விலகியிருக்கப் போகிறார் என்று கெஹெலிய ரம்புக்வெல்ல அறிவித்துள்ளார்.

நேற்று கண்டி இராஜசிங்க மாவத்தையில் அமைந்துள்ள 'ஒக்ரே' ஹோட்டலில் தனது ஆதரவாளர்கள் என்று கொஞ்சப் பேரைக் கூட்டி தனது இந்த முடிவை அவர் அறிவித்தார்.

நீதிமன்றத்தின் மூலம் தனக்கு நியாயம் கிடைக்கும் என உறுதியாக நம்புகிறார் எனவும், நிரபராதியாக மீண்டும் அரசியலுக்கு வருவார் என்று நம்புகிறார் எனவும் தெரிவித்தார்.

"நான் ஒரு அரசியல் அனாதை அல்ல, எனக்குப் பொதுமக்களின் அங்கீகாரம் அப்படியே இருக்கும் சூழ்நிலையில் அரசியலில் இருந்து தற்காலிக ஓய்வு பெறுகிறேன். தான் தொழிலதிபராகச் சம்பாதித்த பணத்தின் மதிப்பைவிட அரசியலில் ஈடுபடும்போது மக்களிடமிருந்து கிடைக்கும் அன்பு மதிப்பு வாய்ந்தது" என்று உருகினார்.

இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 80 பேர் வரையில், இனி வேலைக்காகது என்று ஒதுங்கிவிட்ட நிலையில் ஹெகலியவுக்கு மட்டும் நல்லதொரு சாட்டுக் கிடைத்திருக்கிறது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## சங்கை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது ஆட்சிப்பீடத்தில் இருப்பவர்களுக்கு ஒரு ஆசனம் ஏனும் கிடைத்தால் எமக்கும் பிரதிநிதித்துவம் இருக்கின்றது மக்கள் எங்களையும் ஏற்றிருக்கின்றார்கள் என்று கூறுவார்கள். ஆட்சியாளர்கள் அவ்வாறு சொல்வதற்கு இடமளிக்கக் கூடாது.

அதேநேரம், ஜனாதிபதி தேர்தலின்போது நாங்கள் ஓர் அபாயச் சங்கினை ஊதியுள்ளோம். அந்த அபாயம் ஒருவாறு கடந்து போய்விட்டது. தற்போது அந்தச் சின்னத்தைத் திருடிவிட்டார்கள்.

சின்னத்தினை திருடியவர்கள் அதற்கு முன்னதாக எமது பெயரைத் திருடினார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை திருடினார்கள். அதற்கு முன்னால் 'டி' என்றும் குற்றொன்றையும் இட்டுத் திருடினார்கள்.

திருடுவது அவர்களது வாழ்க்கை வழிமுறையாகவே இருந்தது. திருந்தி விட்டார்கள் என்றுதான் நாம் அவர்களை சேர்த்துக்கொண்டோம். திருடர்கள், கப்பம் கேட்டவர்கள், கடத்தியவர்கள் கொலையாளிகள் திருந்தி விட்டார்கள் என்று நம்பியே சேர்த்து வைத்திருந்தோம். ஆனால் அவர்கள் திருந்தவில்லை. தொடக்கத்தில் கட்சிப் பெயரைத் திருடினார்கள். தற்போது சங்குச் சின்னத்தை திருடியுள்ளார்கள். செப்டெம்பர் 23 நள்ளிரவு நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டது. 24 காலை ஒன்பது மணிக்கு குத்துவிளக்கு சின்னத்துக்கு பதிலாக சங்குச் சின்னத்தினை வழங்குமாறு கடிதத்தினை வழங்கினார்கள்.

பொதுக் கட்டமைப்பில் ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோது சின்னத்தை பயன்படுத்துவதில்லை என்று கூறப்பட்டது. ஆனால் சின்னத்தை களவெடுத்தவர்கள் கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டுதான் ஒபந்தத்தில் கைச்சாத்திட்டார்கள். ஆகவே கூட்டமைப்பையும், சின்னத்தையும் களவாடியவர்களுக்கு எமது மக்கள் தகுந்த பாடத்தினை கற்பிக்கவேண்டும். அடுத்து மம்பழ அணியிருக்கும் தகுந்த பாடத்தினை கற்பிக்க வேண்டும். கொள்கைப் பிடிப்பு இல்லாது விட்டால் தேர்தல் வரும் வரையில் எதற்காக அவர்கள் காத்திருந்திருக்கவேண்டும்? அவர்களுக்கு ஆசனம் வழங்கப்படவில்லை என்பதாலேயே பிரிந்து சென்றுள்ளார்கள். கொள்கைப்பிடிப்பு அல்ல பிரிவதற்குக் காரணம் - என்றார்.

## முன்னாள் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெர்னாண்டோ தொடர்பில் ஏற்கனவே, நீதிமன்ற உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன.

இது தவிர மஹிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணதுங்க, ரோஹித அபேகுணவர்தன மற்றும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா ஆகியோருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## தமிழ் அரசுக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியைவிட்டுப் போகமாட்டேன். என்னைச் சிலர் போகப்பண்ண முயல்கிறார்கள். ஆனால் நான் போகமாட்டேன். பகிரங்கமாகச் சொல்கிறேன். நான் கட்சி அரசியலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில்தான் இணைந்துகொண்டவன். எனது கட்சி என்பது தமிழ் அரசுக்கட்சிதான். அந்தக்கட்சியைவிட்டுப் போகின்ற எண்ணமோ, விலகுகின்ற எண்ணமோ எனக்கு இல்லை. என்னைச் சிலர் விக்கிவிடுவதற்கு முயற்சிக்கலாம். கடைசிவரை போகமாட்டேன்.

என்னுடைய கட்சியிலேயே தலைவனாகத் தெரிவு செய்யப்பட்டும் தலைவனாகச் செயற்படமுடியாமல் இருக்கின்றேன் என்றால் அதையும் சகித்துக்கொண்டுதான் இந்தக் கட்சியிலே இருக்கின்றேன். என்னுடைய கட்சியிலே இருக்கின்றேன். ஆகவே தயவுசெய்து ஒரு கட்சியாக இருங்கள். அலைபாய வேண்டாம். அங்கே இங்கே நீங்கள் போகவேண்டாம். நாங்கள் நாங்களாக இருக்கின்றபோதுதான் எங்களைத் தேடி வரலாற்று வெற்றிகள் வரும்.

நான் 2017ஆம் ஆண்டு ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவராக பங்கேற்ற கரைச்சி பிரதேச சபைக் கூட்டத்தில் ஒரு கோரிக்கை முன்வைத்தார்கள். யாழ்ப்பாணத்தில் 64 மதுபான விற்பனை நிலையங்கள் உள்ளன. கிளிநொச்சியில் ஒன்றுகூட இல்லை. மது அருந்தும் இடத்தில் அதனை அதிகூடிய விலைக்கு வாங்கவேண்டியுள்ளது. ஆகவே ஒரு விற்பனை நிலையத்தினை திறப்பதற்கு அனுமதி அளியுங்கள் என்று என்னிடத்தில் கோரப்பட்டது. அப்போது நான் பார்க்கலாம் என்று கூறிவிட்டு அங்கிருந்து வந்திருந்தேன். அதனை செய்திகளில் நான் மதுபான சாலையை திறப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போவதாக பிரசுரித்தார்கள். ஆனால் என்னால் அவ்வாறு ஒரு விற்பனை நிலையத்தினைக் கூட திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

தற்போது நான் மதுபான விற்பனை நிலையத்துக்கான சிபார்சுக் கடிதத்தினை வழங்கியதாக கூறுகின்றார்கள். நான் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டபோது அவ்விதமான பரப்புரைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், வைத்தியர் மற்றும் பலர் இதனை தீவிரமாக முன்னெடுத்துள்ளனர்.

அந்த விடயங்களை நான் பதிவு செய்து ஒட்டுசுட்டான் சைபர் குற்றத்தடுப்பு பிரிவு, கிளிநொச்சி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாட்டைச் செய்துள்ளேன். விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிச்சயமாக அதன் பின்னர் நான் அந்த நபர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பேன். இந்த விடயத்தினை கைவிடப்போவதில்லை.

நான் 41 வயதில் ஆசிரியர் தொழிலை கைவிட்டு அரசியலுக்குள் வந்தவன். எனது அரசியல் பயணம் கற்களும் முட்களும் நிறைந்தவை. பஞ்சு மெத்தையில் இருந்து அரசியலுக்குள் நான் வரவில்லை. ஆகவே எனது கட்சிக்கும், எமது தேசத்துக்கும் பாதகமான விடயங்களை நான் என்றுமே செய்யப்போவதில்லை.

நான் சிபார்சுக் கடிதம் வழங்கினால் அதனை வெளியிடுங்கள். ஆதரங்களை பகிரங்கப்படுத்துங்கள் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக உள்ளேன். பொய்யான தகவல்களை வெளியிட்டு சேறு பூசாதீர்கள். இதில் எங்களுடைய கட்சியினரும் உள்ளனர் என்பதுதான் மிகப்பெரிய விடயம்.

அதேநேரம், நான் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு செயற்பட முடியாமல் இருக்கும் ஒருவர். அதற்காக நான் கட்சியில் இருந்து வெளியேறப்போவதில்லை. என்னை வெளியேற்றுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார்கள். அந்தச் சவால்களுக்கு முகங்கொடுத்து நான் கட்சியில் தொடர்ந்தும் இருப்பேன் என்றார்.

## சில ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுமுறை வழங்கப்படுவதாக மேல் மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை இன்று பாடசாலைகளை திறப்பதா இல்லையா என்பதை தீர்மானிக்க அந்தந்த மாகாண கல்வி அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## பொதுக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையின் கூர்ப்பே தமிழ் மக்கள் பொதுச்சபையாகும். பொதுச் சபை அடுத்த கூர்ப்புக்குப் போன பின்னரே தேர்தல்களை எதிர்கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் பொதுச்சபை ஜனாதிபதித் தேர்தலில் தேச திரட்சியை எதிர்பார்த்து, அதில் வெற்றியும் பெற்றது. அது சில நாட்களில் நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்புடன் மீளச் சிதறியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் பலம் தமிழ் மக்கள் பொதுச் சபையிடம் இல்லாததால், அதில் இருந்து விலகி இருக்கிறோம். எனவே மக்கள் நாணயமானவர்களுக்கும் கறைபடியாதவர்களுக்கும் தேசதிரட்சிக்காகவும் வாக்களிக்கவேண்டும்.

சங்கு சின்னம் புனிதமானது இல்லை. அதற்கு யாரும் உரிமை கோர முடியாது. அது ஒரு பொது நிலைப்பாட்டிற்கான குறியீடு. பொதுக்கட்டமைப்பில் இருந்த பலர் வெளியில் நிற்கும் போது சிலர் மட்டும் அதனைப் பயன்படுத்துவது அறமில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் சங்கு சின்னத்திற்காக, நாடாளுமன்ற தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிடுபவர்கள் மட்டும் உழைக்கவில்லை. பலரின் உழைப்பு அதில் உண்டு. தேர்தல் பரப்புரைக்கு பலர் முன்னரங்கில் வந்து உழைக்காமல் பின்னின்று உழைத்தவர்களும் உண்டு.

தேச திரட்சியை உருவாக்க முயன்று வெற்றி கண்டு சில நாட்களில் அது சிதறுண்டு போயுள்ளது. அதற்காக நாம் மக்களிடம் மன்னிப்புக் கோருகிறோம். அத்துடன் பொதுக்கட்டமை தற்போது இல்லை என

## அரங்குகொள்ளாத ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன், சிறீதரன் உட்பட வேட்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

இதன் போது வேட்பாளர்கள் அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றியதன் பின்னர் வேட்பாளர் அறிமுக நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் வேட்பாளர்கள் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பொது மக்கள் எனப் பெருமளவலானோர் கலந்து கொண்டு அரங்கை நிறைத்திருந்தனர்.

## சாராய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து தென்னிலங்கையில் இரண்டரை ஆண்டுகளாக மக்கள் மாற்றத்துக்கு தயாராகி விட்டார்கள், அந்த மாற்றத்தில் தமிழ் மக்களும் பங்கேற்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அப்போது, எமது மக்கள் எழுபது வருடங்களாக மாற்றத்துக்காக தங்களது ஆணையை திரும்பத்திரும்ப வழங்கி வருகின்றார்கள். அதனை நீங்கள் ஏற்றுக்கொண்டு மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

மூன்று சதவீதமான வாக்கு வங்கியை கொண்டிருந்த ஜேவிபி, ஜனாதிபதித் தேர்தலில் அதனை 42 சதவீதமாக்கி ஜனாதிபதி பதவியைப் பெற்றிருக்கின்றமை சாதனைதான் அதனை நாம் மதிக்கின்றோம். ஆனால், அதற்கு நாட்டில் சில காரியங்கள் இயல்பாகவே வழிசமைத்தன. நாடு வங்குரோத்து அடைந்தது என்று அறிவிக்கப்பட்டது. பொருளாதார நெருக்கடிகள் காணப்பட்டன. நாட்டை விட்டு கோட்டாபய ஓடி ஒழிந்தார். மக்கள் மாற்றத்தை ஏற்படுத்த முனைந்தவேளை ரணில் விக்கிரமசிங்க புகுந்து அனைத்தையும் கெடுத்தார். இதனால் மக்கள் இரண்டரை வருடங்களின் பின்னர் அந்த ஆதங்கத்தை தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவாக வெளிப்படுத்தினார்கள்.

தற்போது தேசிய மக்கள் சக்தி என்ன செய்கின்றது? ஊழலை ஒழிப்பதாகக் கூறினார்கள். வெளிப்படைத் தன்மையைப் பேணுவதாகக் கூறினார்கள். மதுபான சலைகளுக்கான அனுமதிப்பத்திரத்தினை பெற்றவர்களின் பட்டியலை வெளியிடுவதாகக் கூறினார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. ஜனாதிபதி வேட்பாளர்களின் செலவு விவரங்களை தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிக்க வேண்டிய காலம் நிறைவுக்கு வந்துள்ளது. இன்னமும் ஜனாதிபதி அநுரகுமார அந்த விவரங்களைக் கையளிக்கவில்லை.

அதேபோன்று மதுபான சாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டவர்களி;ன் பெயர்கள், சிபார்சு செய்தவர்களின் பெயர் பட்டியலை வெளியிடுங்கள் என்று வலியுறுத்தினோம். இதுவரை வெளிவரவில்லை. அந்தப் பட்டியல வெளியிட அவர்கள் தயக்கம் காட்டுவது அவர்களும் பிறிதொரு வகையில் ஊழலுக்கு உடந்தை என்பதாகவே பொருள்படும்.

அந்த வகையில் நான் அவர்களுக்கு பகிரங்கமான சவால் விடுகின்றேன். முடிந்தால் அந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற்றவர்கள், சிபார்சு செய்தவாகளின் பெயர் விவரங்களை வெளிப்படுத்துங்கள் - என்றார்.

## 70 ஆண்டுகளாக ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் அங்கஜன் தெரிவித்தார்.

அங்கஜன் இராமநாதன் தலைமையிலான ஜனநாயக தேசிய கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்டத்திற்கான வேட்பாளர் அறிமுக விழா நேற்று நடைபெற்றது. பல்வேறு சமூகப் பிரதிநிதிகள், தொண்டர்கள் மற்றும் மக்களும் நிகழ்வில் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் தற்போதைய நிலைமையொன்றை சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். தற்போது யாழ். தேர்தல் மாவட்டத்துக்கு ஆறு பிரதிநிதிகள் உள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த காலத்தில் ஒன்பதில் இருந்து படிப்படியாக குறைந்து ஆறாகியுள்ளது.

உண்மையில் இந்த நிலைமை ஏற்படுவதற்கு காரணம் தமிழ் தலைவர் கள்தான். அவர்கள் சுயநிர்ணயம் என்று

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# பிரிக்ஸ் அமைப்பில் இணைகின்றது இலங்கை ஞாயிறு ரஷ்யா செல்கிறது உயர்மட்டக் குழு

ரஷ்யாவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹருணி விஜேவர்தன தலைமையிலான குழு எதிர்வரும் 20ஆம் திகதி கசான் நகருக்கு விஜயம் மேற்கொள்கின்றது. இந்த விஜயத்தின்மூலம்பிரிக்ஸ்பொருளாதார கூட்டமைப்பில் இலங்கையின் உறுப்புரிமை தொடரப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் கசான் நகரில் எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பிரிக்ஸ் மாநாட்டில் இலங்கை கலந்துகொள்வதற்கான அழைப்பை நடப்புஆண்டின்தலைமைத்துவத்தை வகிக்கும்இந்தியாவிடுத்திருந்தது. இந்த அழைப்புக்குசாதகமாகபதிலளித்துள்ள வெளிவிவகார அமைச்சு, பிரிக்ஸ் அமைப்பில்உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்திய வெளிவிகாரஅமைச்சர்எஸ்.ஜெய்சங்கரின் அண்மைய கொழும்பு விஜயத்தின்போது, இலங்கையின் பிரிக்ஸ் உறுப்புரிமை அபிலாஷைகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்ட சந்திப்புகளின்போது கலந்துரையாடி இருந்தார்.

சீனா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற முக்கிய உலகப் பொருளாதாரங்களை உள்ளடக்கிய அமைப்பில் இணைவதற்கான





நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்திருந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் பிரிக்ஸ் அமைப்பில் இணையும் விருப்பத்தை ஜனாதிபதி அநுரவும் இதன்போது வெளிப்படுத்தியிருந்தார்.

இதற்கமைவாகவே இலங்கை பிரதிநிதிகள் குழு ரஷ்யா செல்கிறது. பிரிக்ஸ் அமைப்பு ஆரம்பத்தில் பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்காவை உள்ளடக்கியதாக இருந்தது. பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கில் வளர்ந்து வரும் சந்தை நாடுகளின் ஒரு முக்கிய அரசுகளுக்கிடையேயான அமைப்பாகவே பிரிக்ஸ் காணப்படுகிறது.

இந்த அமைப்பினை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் புதிய உறுப்பினர்களாக இலங்கை, ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளை இவ்வாண்டில் இணைத்துக்கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், பிரிக்ஸ் அமைப்பில் இலங்கையின் உறுப்புரிமையானது. சாத்தியமான உள்ளடக்கமாக முக்கிய உலக நாடுகளுடன் அதன் பொருளாதார உறவுகளை ஆழப்படுத்துவதற்கும் சர்வதேச பொருளாதார தளங்களில் மேலும் ஒருங்கிணையவும் சிறந்த வாய்ப்பாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## சிவராம் கொலை உள்ளிட்ட 7 சம்பவங்கள் குறித்த விசாரணைக்கு எரான் வரவேற்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஊடகவியலாளர் சிவராம் படுகொலை உட்பட ஏழு முக்கிய சம்பவங்கள் குறித்த விசாரணைகளைதுரிதப்படுத்துமாறுபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளதை ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ண வரவேற்றுள்ளார்.

சமூகஊடகபதிவில்இதனைத்தெரிவித்துள்ளஅவர்மேலும்குறிப்பிட்டுள்ளதாவது-

இது சிறந்த முயற்சி இந்த சம்பவங்கள் குறித்து நான் நாடாளுமன்றத்தில் உரையாற்றியுள்ளதுடன் பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதியை கோரியுள்ளேன்.

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி,இந்த சம்பவங்களில் நீதி நிச்சயமாக மறுக்கப்பட்டுள்ளது.

முழுமையான பக்கச்சார்பற்ற துரிதமான விசாரணைகள்இடம்பெறும்எனநான்நம்புகின்றேன் .இதன் மூலம் உண்மையான குற்றவாளிகளைத் தண்டிக்கலாம்.

இது இலங்கையின் அபிவிருத்திக்கு அவசியமான சட்டத்தின் ஆட்சி மீதான மக்கள் நம்பிக்கையை அதிகரிக்கும்.

ஊடகவியலாளர்தர்மரட்ணம்சிவராம்படுகொலை லலித் குகன் காணாமலாக்கப்பட்டமை உட்பட முக்கிய ஏழு சம்பவங்கள் குறித்து விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த விசாரணைகளையும் தீவிரப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பதில்பொலிஸ்மா அதிபருக்கு பொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சுஇந்தஉத்தரவைபிறப்பித்துள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் சிஐடியினருடனும் உரிய பொலிஸாருடனும் இணைந்து செயற்படுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு தரப்பு பதில்பொலிஸ்மா அதிபரை கேட்டுக்கொண்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரபல வர்த்தகர் தினேஸ் ஸ்காப்டரின் மரணம்,வெலிகமவில் டபில்யூ 15 ஹோட்டலிற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டமை குறித்தும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறுபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.(05)

## உலக மனநல சுகாதாரத் தினத்தினை முன்னிட்டு பிரதமருக்குச் சின்னம்



உலக மனநல சுகாதார தினத்தை முன்னிட்டு இலங்கை மனநல சுகாதார சேவையாளர்களின் செயற்பாட்டு அமைப்பின் செயற்பாட்டு பணிப்பாளர் சுனில் கீர்த்தி நாணயக்காரவால் பிரதமருக்கு வண்ணத்துப்பூச்சி உருவம் பொறிக்கப்பட்ட சின்னமொன்று அணிவிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மனநல சுகாதார சேவையாளர்களின் செயற்பாட்டு அமைப்பானது, மனநல சுகாரத்துக்கென முன்னின்று செயற்படுவதுடன் மனிதர்கள் உள ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகும்போது அவற்றுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது தொடர்பிலான வழிகாட்டல்களையும் வழங்குகிறது.

2013 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி உலக மனநல சுகாதார தினமாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் மனநல சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வுகளை வழங்குதல் மற்றும் மனநல சுகாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது இந்த தினத்தின் நோக்கமாகும். 'பணியிடத்தில் மனநலத்துக்கு முதலிடம் கொடுப்போம்' என்பதே இம்முறை உலக மனநல சுகாதார தினத்தின் தொனிப்பொருளாகும்.(05)

## இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை; இம்மாத இறுதியில் கொழும்பில் பேச்சு

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்குஅரசாங்கம்புதியமுயற்சியொன்றை முன்னெடுத்துள்ளது. அதற்கமையஇருநாடுகளினதும் கடற்றொழில் அமைச்சுக்களுக்கிடையில் எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பில் விசேட பேச்சு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்ஷங்கரின் இலங்கை விஜயத்தின்போது இந்த பிரச்சினை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக, தென்னிந்திய மீனவர்கள்இழுவைப்படகுகள்மூலம்இலங்கையின் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடிப்பதால், இலங்கை மீனவர்கள்பெரும்பாதிப்புகளைஎதிர்கொள்கின்றமை தொடர்பில் அரசாங்கம் சுட்டிக்காட்டியிருந்தது.

அதற்கமைய இந்த விவகாரம் இரு தரப்புக்கும் பெரும் பிரச்சினையாக உள்ளதாகவும், இம்மாதம் 29 ஆம் திகதி இலங்கை, இந்திய கடற்றொழில் அமைச்சுக்களுக்கு இடையில் 6 ஆவது தடவையாக பேச்சுகளை முன்னெடுத்து அதன் ஊடாக இருதரப்பு இணக்கப்பாட்டுடன்பொதுதீர்வொன்றைஎட்டுவதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதுதொடர்பில்வெளிநாட்டலுவல்கள்அமைச்சின் முக்கிய உயரதிகாரியொருவரிடம் வினவியபோது, 29ஆம் திகதி இந்திய, இலங்கை மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக இரு நாட்டு கடற்றொழில் அமைச்சுக்களுக்கிடையிலான பேச்சுக்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. கூட்டுசெயற்குழு கூட்டத்தின்போது இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்தியாவிடமிருந்து பதில் கிடைத்துள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி எம்மால் கலந்துகொள்ள முடியுமா எனக் கேட்கப்பட்டிருந்தது. எம்மால் பங்கேற்க முடியும் என்று பதிலளித்திருக்கின்றோம். எவ்வாறிருப்பினும் பேச்சில் பங்கேற்கவுள்ள தூதுக்குழுவின்பட்டியலைக்கோரியிருந்தபோதிலும், அது இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

கொழும்பில் கடற்றொழில் அமைச்சால் இந்த பேச்சை நெறிப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியத் தூதுக்குழுபட்டியல்கிடைக்கப்பெற்றவுடன்அதற்கான ஏற்பாடுகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும். - என பதிலளித்தார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாற்றம் எப்போது?

இலங்கையின் பல பகுதிகளிலும் மழையால் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களாக நிலவிய வறட்சியின் பின்னர் இந்த ஆண்டு பருவமழை தொடங்கும்போதே அதிக மழைப் பொழிவு காணப்படுகின்றது. பசுபிக் பெருங்கடலில் வெப்பநிலை கூடிக் குறைவதால் ஏற்படும் எல் நினோ, லா நினோ காலநிலை மாற்றம் காரணமாக இவ்வாறு தொடர் வறட்சியும் அதன் பின்னர் கடும் மழைவீழ்ச்சியும் ஏற்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். அதுபோலவே இந்த ஆண்டும் இனி வரும் இரு ஆண்டுகளும் கடும் மழை வீழ்ச்சி குறித்தும் அவர்கள் கணித்திருந்தார்கள். அப்படியிருந்தும் வெள்ளத்தை எதிர்கொள்வதற்கு நாட்டைத் தயார்ப்படுத்துவதில் ஆளும் தரப்பும் அதிகாரிகளும் தவறியிருக்கிறார்கள் என்றே தோன்றுகின்றது.

மழை தொடங்கிய உடனேயே வெள்ளத்தால் ஒருவர் உயிரிழந்திருக்கிறார். பல ஆயிரம் பேர் வீடுகளைவிட்டு வெளியேறி இருக்கிறார்கள். திடீர் வெள்ளத்தால் பல நகரங்களிலும் போக்குவரத்துக்கு மக்கள் சிரமப்படுகிறார்கள்.

அத்தனகலு ஓயா தூனமலே பகுதியில் வெள்ள மட்டத்தை அண்மித்துள்ளது. களனி கங்கை கொழும்பு நாகலகம் வீதி, ஹங்வெல்ல மற்றும் க்ளன்கோஸ் பகுதிகளில் சிறிய அளவிலான வெள்ள மட்டத்தை அண்மித்துள்ளதுடன் கிங் கங்கை பத்தேகம பகுதியில் சிறிய அளவிலான வெள்ள மட்டத்தை அண்மித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இன்னும் நான்கு நாள்களுக்கு இந்த மழை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் வெள்ள அபாயம் இன்னும் பேரிடராக எழும் என்பது நிச்சயம் எதிர்பார்க்கப்படக்கூடியதே.

நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் களனி கங்கையின் பல இடங்களில் முப்படையினரின் உதவியுடன் மணல் மூடைகளை பயன்படுத்தி தற்காலிக வெள்ளத்தடுப்பு அணைகளை அமைக்கும் ஏற்பாடுகள் இரவோடு இரவாகத்தான் அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்டன. வெள்ளத்தால் நேற்று மாலை வரையில் 22,064 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் காரணமாக தற்போது நிலவும் மழையுடனான வானிலை தொடர்ந்தும் நீடிக்கும் சாத்தியம் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. இதன் காரணமாக மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இன்று 100 மில்லிமீற்றருக்கு மேல் பலத்த மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பதிவாகும் வாய்ப்புள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, முல்லேரியா – களனிமுல்ல பகுதியில் வெள்ளநீரில் மூழ்கி 34 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். வெள்ளம் நிறைந்திருந்த பகுதியில் தோணியில் பயணித்த ஒருவரே தோணி கவிழ்ந்து உயிரிழந்தார் என்று காவல்துறையினர் தெரிவித்தனர். வெள்ளம் ஏற்படும் என்று முன்கூட்டிய அறிவு இருந்தும் நாம் ஏன் அதற்குத் தயாராக இல்லை? வெள்ளம் வந்த பின்னரே ஏன் அது தொடர்பில் அந்தரப்படுகின்றோம்? வெள்ளம் மற்றும் வறட்சிப் பாதிப்புக்காக ஆண்டுதோறும் பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகின்றது. அப்படியிருந்தும் ஏன் இந்தப் பிரச்சினைக்கு இன்னும் தீர்வுகாணப்படவில்லை.

குடியிருப்புக்கள், வாழ்விடங்கள் குறித்த தெளிவான சட்டம், கொள்கை, திட்டமிடல் இன்மையே இதற்கான காரணம் என்பது தெளிவு. வெள்ள அபாயம் ஏற்படக்கூடிய ஆற்றோரங்களிலும் தாழ் நிலப் பகுதிகளிலும் குடியிருப்புக்களை ஏற்படுத்துவதற்கான அனுமதியை வழங்கியதும் அரசுப் பணித்துறைகள்தான் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ரணில் ஆட்சியில் இவற்றையெல்லாம் சரிசெய்யவேண்டும் என்று பேசப்பட்டது. சட்டங்களும் கொள்கைகளும் உருவாக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் எதுவும் நடக்கவில்லை. மீண்டும் வெள்ளம் வந்ததும் அந்தரப்பட்டு நிற்பதும் உதவிகள் தருவதும்தான் தொடர்கின்றது. எப்போது மாறும் இந்த நிலை?

# ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் நஸ்ரல்லாவை காட்டிக் கொடுத்தவர் யார்?

### அவர் இருந்த பதுங்கு குழி மிது 80 தொன் குண்டு வீச்சு



**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்ட பெய்ரூட் பதுங்கு குழி மீது 80 தொன்களுக்கும் அதிகமான குண்டுகள் வீசப்பட்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது. இது நஸ்ரல்லாவின் பதுங்கிடம் இஸ்ரேலுக்குத் துல்லியமாகத் தெரிந்திருக்கிறது என்பதையே காட்டுகின்றது.

ஆயினும் நஸ்ரல்லாவின் படுகொலையின் பின்னர், அவரை யார் காட்டிக் கொடுத்தது என்ற கேள்வியும் ஈரானின் இராணுவ உளவாளி உண்மையா என்ற ஊகங்களும் எழுந்துள்ளன.

**ஹிஸ்புல்லா நிலைப்பாடு மாறுமா?**

நஸ்ரல்லா இறப்பின் பின்னர் அக்குழுவின் நிலைப்பாடு மாறக்கூடும் என்று அமெரிக்காவும், இஸ்ரேல் இராணுவமும் நம்புகின்றன. அதே நேரத்தில் இந்தத் தாக்குதல் மூலம் அதன் இராணுவ திறன்களைக் பெருமளவில் குறைக்க முடிந்ததாகவும் நம்பப்படுகிறது.

பெய்ரூட்டில் ஹிஸ்புல்லாவின் நிலத்தடி கட்டளை மையத்தின் மீது இஸ்ரேலிய விமானப்படை ஒரு வெள்ளிக்கிழமை (27/9/24) குண்டுகளை வீசியது. அக்குழுவின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா மற்றும் பிற மூத்த செயல்பாட்டாளர்கள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

விமானக்குண்டுவீச்சின் எதிரொலி குண்டுவெடிப்பு நடந்த இடத்திலிருந்து பல கிலோமீற்றர் தொலைவு வரை உணரப்பட்டது. இந்த வெடிப்பு 2020ஆம் ஆண்டில் பெய்ரூட் துறைமுகத்தில் நடந்த பெரும் வெடிப்பை நினைவூட்டியது. அதன்போது பயங்கர அழிவுகளில் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்தனர்; பலர் காயமடைந்தனர்.

ஹமாஸ் தலைவர் சின்வார் பல இடங்களில் மாறி மாறி தலைமறைவாக உள்ளார்.

இஸ்ரேல் பதுங்குகுழியை உடைக்கும் வெடிமருந்துகளைப் பயன்படுத்தியது, நஸ்ரல்லா இருந்த தாஹி மாவட்டத்தில் குடியிருப்புக் கோபுரத் தொகுதிகளுக்குக் கீழே அந்தப் பதுங்கு குழி இருந்தது. அதனை இஸ்ரேல் எவ்வாறு குறி வைத்தது என்பதும், அதன் மீதான துல்லியமான தாக்குதலும் அரபு உலகை வியக்க வைத்துள்ளது.

வான் தாக்குதல்கள் சனிக்கிழமை வரை தொடர்ந்ததுடன், தாஹியில் உள்ள ஹிஸ்புல்லாவின் நிலத்தடி ஏவுகணை சேமிப்பு வசதிகளைக் குறிவைத்து இருநாட்களாக வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஹிஸ்புல்லாவின் ஏவுகணைகள், இஸ்ரேலின் கடற்கரையில் கடல் போக்குவரத்தை சீர்குலைக்கும் என்றும், ஹைஃபா துறைமுகத்தை அச்சுறுத்தும் நோக்கில் ஈரானில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளை வைத்திருந்தன எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இத்தாக்குதலின் பின்னர் ஹிஸ்புல்லாவின் செயல்பாட்டுப் போக்கை மாற்றும் என லெபனான் மக்களும் நம்புவதுடன், குடிமக்களை இலக்காகக் கொண்ட ஏவுதளங்கள், ஆயுதங்கள் சேமிப்பு கட்டடங்கள், மூலோபாய ஆயுதங், உற்பத்தி வசதிகள் மீது இஸ்ரேலின் தாக்குதல் பெரும் அழிவை ஏற்படுத்தி உள்ளது.

அத்துடன் ஹிஸ்புல்லாவின் உள்கட்டமைப்புகள் உட்பட 140க்கும் மேற்பட்ட ஹிஸ்புல்லா இலக்குக ளையும் இஸ்ரேல் தாக்கியுள்ளது. சில இலக்குகள் பெய்ரூட்டில் உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு அடியில் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் எல்லைகளில் உள்ள குடிமக்களுக்கு



ஏற்படும் அச்சுறுத்தல்களை அகற்றுவதில் தமது இராணுவம் கவனம் செலுத்துவதாகவும், எந்தவொரு சூழ்நிலைக்கும் தயாராக இருப்பதாகவும் இஸ்ரேலிய அரசு வலியுறுத்தி உள்ளது.

**இஸ்ரேலிய உளவு வலையமைப்பு:**

நஸ்ரல்லாவின் இரகசிய இருப்பிடம் குறித்து இஸ்ரேலிய உளவு அமைப்பினரால் நீண்டகாலமாக சேகரிக்கப்பட்ட தகவல்களே அவரது படுகொலைக்கு அடித்தளம் அமைத்தது.

ஆயினும் தற்போது லெபனானில் நஸ்ரல்லாவைக் காட்டிக் கொடுத்தது யார் என்றே எல்லோரும் கேட்கிறார்கள். நஸ்ரல்லா படுகொலைக்குப் பிறகு

**நஸ்ரல்லா காட்டிக் கொடுக்கப்பட்டாரா?**

லெபனான் பொதுமக்களும் நஸ்ரல்லாவைக்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர்....

4ம் பக்க தொடர்ச்சி...........





காட்டிக் கொடுத்தது யார் என்றே கேட்கிறார்கள். பத்திரிகைகளும் அதே கேள்வியைத்தான் கேட்கின்றன.

ஹிஸ்புல்லா அமைப்பினரும் நஸ்ரல்லா படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகத்துடன் நடந்து கொள்கின்றனர். அவர்களுக்கு இந்தத் தாக்குதல் பெரும் அடியாக விழுந்துள்ளது.

இஸ்ரேலின் தாக்குதலில் ஹசன் நஸ்ரல்லா இறந்திருக்கமாட்டார் என்றே லெபனானில் ஹிஸ்புல்லா ஆதரவாளர்கள் சனிக்கிழமை கூறினர். அவர்களில் பலர் இன்னும் தொலைக்காட்சித் திரைகளில் அவரைப் பார்க்கக் காத்திருக்கிறார்கள். அடுத்து என்ன நடக்கும் என்று கலங்கி ஏங்கிப் போயுள்ளார்கள்.

அவரது இறப்பு குறித்த அறிவிப்பு ஒரு சூழ்ச்சி என்றும் எதிரிகளால் குழப்புவதற்காக வடிவமைக்கப்பட்ட தந்திரம் என்றும் அவர்கள் முதலில் நினைத்தார்கள். பெய்ரூட்டின் தெருக்கள் எப்பொழுதும் பரபரப்பாக இருக்கும். தற்போது அந்த நகரம் இறந்து போனது போல் தோன்றுகிறது. இளைஞர்களுக்கு இன்னும் அவரது இறப்ப நம்புவதற்குக் கடினமாக இருக்கின்றது என்று தெரிவிக்கின்றனர்.

**நஸ்ரல்லாவின் உடல் மீட்பு:**

படுகொலை செய்யப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு நஸ்ரல்லாவின் உடல் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டது. தற்போது இப்படுகொலைக்கு லெபனான் மக்கள் ஈரான் இராணுவ உளவாளியை நோக்கித்தான் விரல்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஹிஸ்புல்லாவின் நடவடிக்கைகள் இஸ்ரேலிய உளவுத்துறையினருக்கு முழுமையாகத் தெரிந்துள்ளது. அத்துடன் நஸ்ரல்லாவின் நடவடிக்கைகள் அனைத்தும் பல மாதங்கள் கண்காணிக்கப்பட்டுள்ளன என்றே நம்பப்படுகின்றது.

நஸ்ரல்லாவை ஈரானுக்கு அழைத்துச் சென்றது ஈரானிய உளவுத்துறை அதிகாரிகள் என்றும் நம்புகிறார்கள். எப்படியிருந்தாலும், யாரோ ஒருவர் ஹிஸ்புல்லாவை அழிக்கும் நோக்கில் தலைமையை காட்டிக் கொடுத்தார்கள் என்பதே உண்மையாகும்.

மேலும் இந்த அமைப்பின் தலைமையின் சரியான இடத்தை துல்லியமாக இஸ்ரேலால் கண்டறிய முடிந்தது. எப்படியோ, அந்த இடத்தையும் இரகசிய சந்திப்பில் பங்கேற்றவர்களையும் இஸ்ரேல் கண்டுபிடித்துள்ளது.

இதனாலேயே லெபனானில் ஹிஸ்புல்லா ஆதரவாளர்கள் நஸ்ரல்லாவின் இறப்பை ஈரானிய உளவாளியின் துரோகம் என்று கருதுகின்றனர்.

லெபனானில் பல நாட்களாக வான்வழித் தாக்குதலை மட்டுமே நடத்தி வந்த, இஸ்ரேல் தரை வழித் தாக்குதலைத் தொடங்குவது மத்திய கிழக்கில் பெரும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா இறப்பின் பின்னர், மத்திய கிழக்கில் கடந்த சில காலமாகவே பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

**லெபனானில் தரை வழி தாக்குதல்:**

இஸ்ரேல் தனது எல்லைக்கு அருகிலேயே தரை வழி தாக்குதலைத் தொடங்கியதாக அறிவித்துள்ளது. ஈரானின் தற்போதய தாக்குதலின் பின்னர் பெரிதாக போர் மூளும் அபாயம் உள்ளதென ஐ.நா. எச்சரித்துள்ளது.

சில மாதங்களாக லெபனான் எல்லையில் இஸ்ரேல் வீரர்கள் ஏற்கனவே குவிக்கப்பட்டு இருந்தார்கள். கடந்த இரண்டு வாரங்களாக ஹிஸ்புல்லா மீது வான்வழித் தாக்குதல்களை அது நடத்தி வரும் நிலையில், இப்போது தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் தொடங்கி உள்ளது.

தொடர்ந்து ஹமாஸ், ஹிஸ்புல்லா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், 29/9/24 ஞாயிற்றுக்கிழமை யேமனில் உள்ள ஹவுதி படை மீதும் இஸ்ரேல் தாக்குதலை நடத்தியது. இதனால் மத்திய கிழக்கில் தொடர் பதற்றம் அச்சமும் நிலவி உள்ளது.

இதற்கிடையே இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே போர் நிறுத்தத்தைக் கொண்டு வர பல அரபு நாடுகள் முயன்றுள்ளன. ஆனால் ராணுவ அழுத்தம்கூட சில சமயம் உதவும் என்ற போதிலும் அது எதிர்பாராத விளைவுகளுக்கும் வழிவகுக்கும் என்று அமெரிக்கா எச்சரித்ததும் குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


காலைக்கதிர் Kalaikkathir

# 3 வயது குழந்தை உட்பட மூவர் தொடருந்து மோதியதில் சாவு

கட்டுகுருந்த ரயில் நிலையத்துக்கு அருகில் சனிக்கிழமை ரயிலில் மோதி 03 வயது குழந்தை உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறைதெற்கு ரஜவத்தை பகுதியைச்சேர்ந்தவர்களே உயிரிழந்துள்ளனர்.

பெலியத்தவிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த அதிவேக ரயிலில் மோதியே இவர்கள் உயிரிழந்தனர் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது, குழந்தையின் 22 வயதுடைய தந்தை உட்பட இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, விபத்துக்குள்ளான 03 வயது குழந்தை களுத்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# வடமராட்சியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 09 உணவு தயாரிப்பு நிலையங்களுக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை பொது சுகாதார பரிசோதகர் தலைமையிலான அணியினர் வல்வெட்டித்துறை பகுதிகளில் இயங்கிய உணவு தயாரிப்பு நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, சுகாதார சீர்கேட்டுடன், சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவு தயாரிப்பு நிலையங்கள் ஐந்து இனங்காணப்பட்டன. அவற்றுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு தொடரப்பட்டபோது இந்நிலையங்களின் ஐந்து உரிமையாளர்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தி, அவர்களுக்கு எதிராக 70 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அதேவேளை, பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட உணவு தயாரிப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத நிலையங்களுக்கு எதிராகவும் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

அதன்போது அந்நிலையங்களின் 04 உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவர்களுக்கு மன்றால் 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அத்துடன், நீதிமன்றத்துக்குசமுகமளிக்காத உணவக உரிமையாளர்களை எதிர்வரும் 22ஆம் திகதி மன்றில் சமுகமளிக்குமாறு அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.(05)

# போலித் தமிழ்த் தேசியவாதிகளை தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும்

## ஐங்கரநேசன் தெரிவிப்பு



முள்ளிவாய்க்கால் யுத்தத்துக்குப் பின்னரான தமிழ் அரசியல் போலித் தமிழ்த் தேசியவாதிகளால் திசை திருப்பப்பட்டு வருகிறது. இவர்களால் தமிழ்த் தேசியத்தைச் சிங்களத் தேசியத்துக்குள் கரைக்கும் நிகழ்ச்சி நிரல் திட்டமிட்டு மிகவும் நாசூக்காக முன்னெடுக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிராகரித்து சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்கக் கோரியவர்கள் இவர்கள்தான். இன்னொருபுறம் தமிழ்த்தேசியம் பேசும் அரசியல்வாதிகளே மதுபானச்சாலை அனுமதி பத்திரங்களைப் பெற்று விற்றுச் சம்பாத்தியம் செய்கிறார்கள்.

இந்தப் போலித் தமிழ்த்தேசியவாதிகளையும் போதை வியாபாரிகளையும் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் ஜனநாயக தமிழரசுக் கட்சியும் இணைந்து ஜனநாயகத் தமிழ் அரசுக் கூட்டமைப்பாக இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறது. இது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச்சபையும் ஏழு தமிழ்த்தேசியக் கட்சிகளும் இணைந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாகப் பொதுவேட்பாளரை நிறுத்தியிருந்தன.

இதன் போது இரண்டு தரப்பினருக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுபவரும் அவருக்கான தேர்தல் சின்னமும் தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான குறியீடாக மட்டுமே கருதப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இத் தேர்தலில் கட்சிகளைக் கடந்து தமிழினமாகச் சிந்திப்போம் என்ற கோசம் முன்வைக்கப்பட்டது. பொதுவேட்பாளருக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளைக் கொண்ட உறுப்பினர்களும் தொண்டர்களுங்கூட பொதுவேட்பாளரின் சங்குச் சின்னத்துக்குப் பெருமளவில் வாக்களித்திருந்தார்கள்.

தமிழ் மக்கள் பொதுச்சபை நாடாளுமன்றத் தேர்தலில் நேரடியாக ஈடுபடமுடியாது என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இதனால் இப்போது தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு என்ற அமைப்பு இல்லை.

இரண்டு தரப்புகளும் இணைந்து இறுதியாக நிகழ்த்திய கலந்துரையாடலில் தமிழ் மக்கள் பொதுச்சபையும் பங்கேற்று தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளாவிடில் தமிழ்த் தேசியப் பசமை இயக்கம் இந்த அணியில் இடம்பெறாது என்று மிகத் தெளிவாக தெரியப்படுத்தியிருந்தோம்.

தமிழ் மக்களின் கூட்டு உழைப்பால் பிரபல்யமான சங்குச் சின்னத்தைத் தனிப்பட்ட சில கட்சிகள் தந்திரமாகத் தங்கள் வெற்றிக்காகப் பயன்படுத்துவது அரசியல் அறமல்ல என்பதால் சங்குக்கூட்டணியில் இடம் பெறமுடியாது என்பதை நாம் தெரிவித்திருக்கின்றோம்.

தமிழரசுக்கட்சியில் நிலவுகின்ற தமிழர் விரோத, ஜனநாயக விரோதப் போக்குகளால் அக் கட்சியில் இருந்து உண்மையான தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் உருவாக்கியுள்ள ஜனநாயக தமிழரசுக் கட்சியுடன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் இணைந்து ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு உருவாகியுள்ளது. இந்தக் கூட்டமைப்பு சுயேச்சையாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தலைமையில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றது.

ஏற்கனவே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பயன்படுத்திய மாம்பழம் சின்னத்தையே நாங்கள் தேர்தல் ஆணையத்திடம் கேட்டு இத்தேர்தலில் எமது சின்னமாகப் பெற்றுக்கொண்டுள்ளோம். காலத்தின் கட்டாயமாகப் போட்டியிடுகின்ற எங்களை ஆதரிக்க வேண்டுமென்று தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் தெரிவித்தார்.(05)




### கரடியனாறு, வெல்லாவெளி, களுவாஞ்சிகுடியில்

# இரண்டே தினங்களில் 18 மாடுகள் திருட்டு

மட்டக்களப்பு கரடியனாறு, வெல்லாவெளி, களவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுள்ள பிரதேசத்தில் கடந்த இரு தினங்களில் 7 பசுமாடுகள், 11 எருமை மாடுகள் உட்பட 18 மாடுகள் திருட்டுப் போயுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியனாறு பொலிஸ் பிரிவில் கடந்த வியாழக்கிழமை இரவு 11 எருமை மாடுகள் காணாமல் போயுள்ளன என பொலிஸ் நிலையத்தில் மாட்டின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்,

இதேவேளை கடந்த வியாழக்கிழமை வெல்லாவெளி பிரதேசத்தில் 3 பசுமாடுகளும், வெள்ளிக்கிழமை ஒரு பசுமாடு உட்பட 4 மாடுகளும் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பிரிவில் 3 பசுமாடுகளும் காணமல் போயுள்ளன.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக அந்தந்த பொலிஸ் நிலைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# உடல்நலப் பாதிப்பு காரணமாக தேர்தலில் போட்டியிடவில்லை

## காமினி லொகுகே அறிவிப்பு



உடல்நலம் சரியில்லாததால் தேர்தலில் போட்டியிட முடியாத நிலையில் உள்ளதாக தெரிவித்த முன்னாள் அமைச்சர் காமினி லொகுகேயிற்கு ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன தேசிய பட்டியலில் இடமளிக்கப்பட்டுள்ளது.

உடல்நலம் சரியில்லாததால் தேர்தலில் இம்முறை போட்டியிடமாட்டேன் என காமினி லொகுகே அறிவித்திருந்தார். எனினும் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் தேசிய பட்டியலில் அவரது பெயர் இடம்பெற்றுள்ளது.

உடல்நலபாதிப்பால் முழுமையாக செயற்பட முடியாத நிலையில் உள்ள ஒருவரின் பெயரை தேசிய பட்டியலில் சேர்த்துள்ளமை குறித்து செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியவேளை தன்னால் ஆசனத்தில் அமர்ந்திருந்து பணியாற்ற முடியும் என காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

நாமல்ராஜபக்ஷவின் பெயர் தேசிய பட்டியலில் இடம்பெற்றுள்ளமை குறித்து கருத்து தெரிவித்துள்ள காமினிலொகுகே நாமல் ராஜபக்ஷ 224 தொகுதிகளிற்குமான ஏற்பாட்டாளர் பணிகளை முன்னெடுக்கவேண்டியுள்ளதால் அவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு பதில் அந்த பணிகளில் கவனம் செலுத்தவேண்டும் என கட்சி உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர் எனத் தெரிவித்துள்ளார்.(05)

# தேர்தல் கடமைக்கு வராவிடின் ஒரு இலட்சம் ரூபாய் தண்டம்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

தேர்தல் கடமைகளுக்கு சமுகமளிக்குமாறு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சகல அதிகாரிகளும் கடமைகளுக்கு கண்டிப்பாக வருகை தருவது அவசியம் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேர்தல் கடமைகளுக்கான நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டுள்ள அதிகாரிகள், கடமைக்கு வருகை தரத் தவறும் பட்சத்தில், ஒரு லட்சம் ரூபா தண்டப் பணம் அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்களுக்கு இத்தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்திருக்காமை மற்றும் விண்ணப்பத்தை நிராகரித்திருந்தமை என்பவை தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிப்பதற்கான காரணமல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாம், தேர்தல் கடமைகளில் ஈடுபடும் சேவை நிலையத்துக்கு வருகை தந்த பின்னர் வருகைக்கான சான்றிதழை நிறுவனத்தின் தலைவருக்கு சமர்ப்பிப்பது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கடமைகளுக்கு சமுகமளிக்காத அதிகாரிகள் நாட்டின் அரசமைப்புக்கு இணங்க, தேர்தல் ஆணைக்குழுவுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதை நிராகரித்துள்ளதாக அல்லது அதற்கு தகுதி இல்லாத நபர் எனக் கணிக்கப்படுவார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# அநுர - ரணில் இடையே வித்தியாசமில்லை சிலிண்டருக்கு வாக்களிப்பதே சிறந்தது

## நிமல் லான்சா தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, முன்னாள்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்களையே முன்னெடுத்துச் செல்கின்றார். அவ்வாறெனில், பொதுத் தேர்தலில் மக்கள் எமக்கு வாக்களிப்பதே பொருத்தமானதுஎனமுன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

நீர்கொழும்பில்சனிக்கிழமைநடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாடளாவிய ரீதியில் சிலிண்டர் சின்னத்தில் பலமான ஓர் அணியை களமிறக்கியிருக்கின்றோம். ராஜபக்ஷர்கள் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும், அரசியலிலிருந்து விலகுவார்களா எனத் தெரியாது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ராஜபக்ஷர்களின் கட்சியாகும். அவ்வாறிருக்கையில் அந்த கட்சியின் சார்பாக தேர்தலில் போட்டியிடாமல் தேசிய பட்டியலுக்கூடாக நாடாளுமன்றத்துக்கு வர முயற்சிப்பது தவறான முன்னுதாரணமாகும்.

எமக்கு அரசாங்க அதிகாரம் தேவையில்லை. அதனை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான திசைக்காட்டிக்கு வழங்குங்கள். ஆனால், எமக்கு பலமான எதிர்க்கட்சியொன்றே தேவையாகும். கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற 38 எம்.பி.க்கள் எம்மில் இருக்கின்றனர். இம்முறை அதனை விட அதிக ஆசனங்களைக் கைப்பற்ற முடியும் என்று நம்புகின்றோம்.

இது ஜனாதிபதித் தேர்தல் அல்ல. நாடாளுமன்றத் தேர்தலாகும். எனவே, மக்கள் தம்முடன் வாழும் தமக்கான பிரதிநிதியைத் தெரிவுசெய்ய வேண்டும். அதற்கமைய ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கும் பொதுத் தேர்தல்முடிவுகளுக்கும்இடையில்மாற்றங்கள் காணப்படும் என்று நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் ஜே.வி.பி.யில் 39 எம்.பி.க்கள் காணப்பட்டனர். ஆனால், பின்னர் அந்த எண்ணிக்கை மூன்றாகக் குறைவடைந்தது. முன்னர் இருந்த எவரும் இம்முறைத் தேர்தலில் களமிறங்கவில்லை. காரணம், மக்கள் அவர்களைப் புறக்கணித்துள்ளனர். ஜனாதிபதி அநுரவின் வெற்றியை பயன்படுத்திக்கொண்டுநாடாளுமன்றத்துக்கு வருவதே பெரும்பாலானோரின் நோக்கமாக உள்ளது.

மக்கள் எமது அரசாங்கத்தைப் புறக்கணித்தாலும்முன்னாள்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவின்வேலைத்திட்டங்களையே தற்போதைய அரசாங்கமும் முன்னெடுத்துச் செல்கிறது. ரணிலின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அநுர ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படவில்லை. அவர்வழங்கியவாக்குறுதிகளைநிறைவேற்ற வேண்டும்.

அவ்வாறில்லை, என்றால் மக்கள் இம்முறை எமக்கே வாக்களிப்பது உசிதமானதாக இருக்கும். காரணம், அவர்களால் புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை என்றால், நாம் ஆரம்பித்தவற்றை நாமே நிறைவு செய்வோமல்லவா? அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொடுக்குமளவுக்குமக்கள்முட்டாள்கள்அல்ல.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மூன்றில் இரண்டை வழங்கியதால் நாடு எவ்வாறான அழிவுகளை சந்தித்தது என்பதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். - என்றார்.

(05)

# கொடிகாமத்தில் குண்டு வெடிப்பு: இளைஞன் ஒருவர் படுகாயம்



யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் குண்டு வெடித்ததில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம்பகுதியில்உள்ளவயல்காணி ஒன்றில் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) குறித்த இளைஞன் வேலை செய்து கொண்டிருந்த வேளை நிலத்தினுள் புதையுண்டிருந்த வெடி பொருள் வெடித்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம்தொடர்பில்கொடிகாமம்பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர்.

(05)

# நாளாந்தம் 8 உயிர் மாய்ப்பு சம்பவங்கள் நாட்டில் பதிவு

நாட்டில் நாளாந்தம் 08 உயிர் மாய்ப்பு சம்பவங்கள் பதிவாகுகின்றன என இலங்கை வைத்திய சங்கம் தெரிவித்துள்ளது.

சிறுவர்களின் உடல், உளநடத்தைகளில் மாற்றங்கள் ஏற்பட்டால் அவர்களை உடனடியாக வைத்தியர்களிடம் அழைத்துச் செல்லுமாறு அச்சங்கத்தின் மனநலவைத்தியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலகில் அதிகளவான உயிர் மாய்ப்பு சம்பவங்கள் பதிவாகும் நாடுகளில் இலங்கை 21ஆம் இடத்தில் இருப்பதாக அச்சங்கத்தின் தலைவர் வைத்தியர் சஜீவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே, நீங்கள் அல்லது உங்களுக் குத் தெரிந்த ஒருவர் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தால் 1926 அல்லது 1333 என்ற மனநல உதவி சேவைகள் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு அச்சங்கம் தெரிவித்துள்ளது.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

## 70 ஆண்டுகளாக....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியில் பேசிக்கொண்டாலும் உள்மனதில் சுயநலம் என்றே நினைத்துக்கொள்வார்கள். அவர்கள் எழுபது ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஒரே விடயத்தினைக் கூறி மக்களை உரிமை மாயைக்குள் தள்ளி விட்டுள்ளார்கள்.

இதனால் தமிழ் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக உள்நாட்டிற்கும், வெளிநாட்டிற்கும் தங்களது சொந்த இடங்களை விட்டு வெளியேறிவிட்டார்கள்.

எந்தவொரு தமிழ் தலைவர்களும் தங்களது இருப்பை நோக்கிச் சிந்தித்தார்களே தவிர, தமிழ் மக்களின் இருப்பினை சிந்திக்கவில்லை. இந்த நிலைமை நீடித்தால் நிச்சயமாக, அடுத்த தேர்தலின்போது ஐந்து பிரதிநிதித்துவத்தினையே யாழ். மாவட்டம் கொண்டிருக்கும் ஆபத்துக்கள் உள்ளது. ஆகவே தமிழ் மக்கள் தம்மை எழுபது ஆண்டுகளாக ஏமாற்றியவர்களை தவிர்த்து எதிர்காலத்தில் இருப்பினை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதற்குரிய தகமையைக் கொண்டுள்ள ஜனநாயக தேசிய கூட்டணியை பலப்படுத்தவேண்டும் என்றார்.

## பல ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களனி கங்கை கொழும்பு நாகலகம்வீதி, ஹங்வெல்ல மற்றும் க்ளன்கோஸ் பகுதிகளில் சிறிய அளவிலான வெள்ள மட்டத்தை அண்மித்துள்ளதுடன் கிங் கங்கை பத்தேகம பகுதியில் சிறிய அளவிலான வெள்ள மட்டத்தை அண்மித்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதிகளை அண்மித்து தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் களனி கங்கையின் பல இடங்களில் முப்படையினரின் உதவியுடன் மணல் மூடைகளை பயன்படுத்தி தற்காலிக வெள்ளத்தடுப்பு அணைகளை அமைக்கும் ஏற்பாடுகள் நேற்றிரவு முன்னெடுக்கப்பட்டதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

பலத்த மழை மற்றும் வெள்ளத்தால் 22,064 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

9 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் காரணமாக தற்போது நிலவும் மழையுடனான வானிலை தொடர்ந்தும் நீடிக்கும் சாத்தியம் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

இதன் காரணமாக மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இன்று 100 மில்லிமீற்றருக்கு மேல் பலத்த மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைபதிவாகும் வாய்ப்புள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, முல்லேரியா - களனிமுல்ல பகுதியில் வெள்ளநீரில் மூழ்கி 34 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். வெள்ளம் நிறைந்திருந்த பகுதியில் தோணியில் பயணித்த ஒருவரே தோணி கவிழ்ந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 34 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## தமிழர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலமாக நாடாளுமன்றத்திற்குச் சென்று அதன் ஊடாக மக்களின் சேவைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பதுதான் எமது நோக்கமாகவுள்ளது. ஆகவே மக்கள் தீர்க்கமாகச் சிந்திக்கவேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# பொறுப்புக்கூறலுக்கு உள்நாட்டு பொறிமுறை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; நிதிக் குற்றங்கள்

## ஆராய புதிய குழுக்கள் - அரசு திட்டம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நல்லிணக்க செயற்பாடுகள் நிதி குற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக அரசாங்கம் மூன்று உயர்மட்ட குழுக்களை நியமிக்கவுள்ளது.

பொதுத்தேர்தலிற்கு முன்னதாக இந்த குழுக்களை அரசாங்கம் நியமிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒழுக்காற்று அடிப்படையிலான ஆட்சி ஊழல் வீண்விரயம் போன்றவற்றிற்கு தீர்வைக் காணுதல் போன்ற ஜனாதிபதியின் தேர்தல்கால வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த குழுக்களை அரசாங்கம் நியமிக்கவுள்ளதாக அரசாங்க வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன.

உள்நாட்டு பொறிமுறை மூலமே பொறுப்புக்கூறலிற்கு தீர்வு காணப்படும் எனத் தெரிவித்துள்ள அந்த வட்டாரங்கள் பொறுப்புக்கூறல் நல்லிணக்க விடயத்திற்கு தீர்வை காணக்கூடிய திறமையான நபர்கள் எங்களிடம் உள்ளனர் என அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதிக்கப்பட்டுள்ள பெருமளவு மக்களின் துயரங்கள் குறித்து நாங்கள் அறிவோம், நாங்கள் அவர்களிற்கு நீதியை வழங்குவோம் எனத் தெரிவித்துள்ள அரசாங்க வட்டாரங்கள் நம்பகதன்மை மிக்க உண்மை மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளன.

இன்னமும் தீர்வு காணப்படாமல் உள்ள பொறுப்புக்கூறல் சம்பவங்களின் எண்ணிக்கையை அறிவதற்கான நடவடிக்கைகளை விசாரணை அதிகாரிகள் துரிதப்படுத்தியுள்ளனர் எனவும் அவை தெரிவித்துள்ளன.

இதேவேளை குழுவொன்று ஊழல் களவாடப்பட்ட சொத்துக்கள் குறித்து இழக்கப்பட்ட பொதுமக்களின் வரிப்பணத்தை மீட்பதற்கான பரிந்துரைகளை முன்வைக்கும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து புதிய கோணத்தில் ஆராய்வதற்கான குழுவொன்று நியமிக்கப்படும், இதற்காக விசேட குழுவை தெரிவு செய்துள்ளோம், பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதி வழங்கப்படும் என இந்த விடயங்கள் குறித்து நன்கறிந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.(05)

# சிறப்புத் தேவையுடைய சிறுவர்களை சித்திரவதைசெய்த விடுதிக் காப்பாளர்

## அநுராதபுரத்தில் கைது

அநுராதபுரம் நகரிலுள்ள விசேட தேவையுடையோர் பாடசாலையின் விடுதியில் வசிக்கும் சிறுவர்களை சித்திரவதை செய்ததாக கூறப்படும் அவ்விடுதியின் காப்பாளர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், அநுராதபுரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்றால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

விடுதியில் வசிக்கும் 10 முதல் 15 வயதுக்குட்பட்ட செவித்திறன் குறைபாடுடைய ஏழு சிறுவர்களை இந்த காப்பாளர் தடியால் தாக்கினார் எனப் பெற்றோரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார் என அனுராதபுரம் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர் ஜயவீர தெரிவித்தார்.

தாக்குதலுக்கு உள்ளான சிறுவர்கள் சட்ட வைத்தியரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)






### லெபனானில் இஸ்ரேல் தொடர் தாக்குதல்:

# இலங்கை அமைதிப் படையினர் உயிருக்கு லெபனானில் ஆபத்து

லெபனானில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள தாக்குதல் காரணமாக இலங்கையை சேர்ந்த 100 இற்கும் அதிகமான அமைதிப்படைவீரர்கள்உயிராபத்தை எதிர்கொண்டுள்ளனர்.

தென்லெபனானின் நக்குராவில் உள்ளஐக்கியநாடுகளின்இடைக்கால படையின் மத்திய கட்டளைபீடத்தை இலக்குவைத்து இஸ்ரேலிய படையினர் வெள்ளிக்கிழமை மேற்கொண்ட தரைத்தாக்தால் வான்தாக்குதலில் இலங்கையைச் சேர்ந்தஇரண்டுஅமைதிப்படையினா் காயமடைந்தனர்.

இதேவேளை ஐக்கியநாடுகள் அமைதிப்படையினர் குறிப்பிட்ட எல்லைபகுதியிலிருந்து வெளியேற வேண்டும் என இஸ்ரேல் வேண்டுகோள் விடுத்துள்ளதை தொடர்ந்து குழப்பநிலை உருவாகியுள்ளது.

அமைதிப்படையினர் அந்த தளத்திலிருந்துவெளியேறவேண்டு;ம் என இஸ்ரேலிய படையினர் வேண்டுகோள் விடு;த்துள்ளனர். அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய படையினரை நோக்கி ஹிஸ்;புல்லாக்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இஸ்ரேல் ஐக்கியநாடுகளின் அமைதிப்படையினரை வெளியேறச் சொல்லியுள்ளது என தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்கால படையின் பேச்சாளர் அன்ரே டெனென்டி இஸ்ரேலையும் லெபனானையும் பிரிக்கும் மூன்று கிலோமீற்றர் நீலகோட்டிலிருந்து தங்களை இஸ்ரேல் விலகசொல்லியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அமைதிப்படையினர் இதனை ஏற்க மறுத்துள்ளனர்.

ஐக்கியநாடுகளின் கொடியுடன் காணப்படும் அமைதிப்படையின் மத்திய கட்டளை பீடத்தில் 125 இலங்கை அமைதிப்படையினர் உள்ளனர்எனத்தகவல்கள்வெளியாகியுள்ளன.

லெபனானிற்கான ஐக்கிய நாடுகளின் இடைக்கால படையில் பல நாடுகளை சேர்ந்த சுமார் 9500 இற்கும் மேற்பட்ட படையினர் பணியாற்றுகின்றனர்.

2006 இல் ஹெஸ்புல்லா அமைப்பிற்கும் இஸ்ரேலிற்கும் இடையில் 33 நாட்கள் நீடித்த யுத்தத்தின்பின்னர் உருவான யுத்த நிறுத்த உடன்படிக்கையை கண்காணிப்பதே இவர்களின் பணி.

வெள்ளிக்கிழமை இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலிற்கு சர்வதேச அளவில் கண்டனம் வெளியாகியுள்ளது.ஐக்கியநாடுகள் அமைதிப்படையினரை தாக்குவதை இஸ்ரேல் கைவிடவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு ஐக்கியநாடுகளின் கொடியின் கீழ் செயற்படும் தனது துணிச்சலான படைவீரர்களை பாராட்டியுள்ளதுடன், இஸ்ரேலின் தாக்குதலை கண்டித்துள்ளது.

ஐக்கியநாடுகளின் பணியாளாகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான கடப்பாடு,ஐக்கியநாடுகளின் வளாகத்தின்மீறல்மீறாதன்மஷ்யைஎந்ததருணத்திலும் உறுதி செய்வது குறித்து இலங்கை உறுதியாக உள்ளது என வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் இதற்கு சில மணிநேரத்தின் பின்னர் இஸ்ரேல் ஐக்கிய நாடுகளின் அமைதிபடையினரை இலக்குவைத்தது, விமானதாக்குதலில் இரண்டு லெபனான் படையினர் கொல்லப்பட்டனர்.

காயமடைந்த இலங்கை அமைதிப்படையினர் ஐநாவின் தளத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என தெரிவித்துள்ள இராணுவபேச்சாளர் ஏனையவர்கள் தளத்திலிருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் இடைக்கால படையின் தளபதி உட்பட்டவர்கள் இலங்கை அமைதிப்படையினரை மருத்துவமனையில் சென்று பார்த்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

காயமடைந்த இலங்கை படையினர் எவரும் உயிராபத்தான நிலையில் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய படையினர் ஐநாவின் தளத்தை இலக்குவைக்கவில்லை,விமானதாக்குதலின்சிதறல்களே தாக்கின,தரைதாக்குலும் ஆட்டிலறி தாக்குதலும் ஒரே நேரத்தில் இடம்பெற்றதால் அவர்களால் இரண்டையும் வித்தியாசப்படுத்த முடியவில்லை என தெரிவித்துள்ள இலங்கை இராணுவத்தின் பேச்சாளர் நகூரா கிராமத்தினை இலக்குவைத்தே விமானதாக்குதல் இடம்பெற்றது தளத்தை இலக்குவைத்து இல்லை என சந்தேகிக்கின்றனர் என தெரிவித்துள்ளார்.

இலங்கை அமைதிப்படையினர் பதுங்குழியில் இருந்தனர்,தாக்குதல் 150 மீற்றர் தொலைவில் இடம்பெற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(05)

# கண்ணாடிக் குவியலுக்குள் விழுந்து ஒருவர் உயிரிழப்பு

ஹீங்கமவில் உள்ள சுற்றுலா ஹோட்டல் வேலைத்தளத்தில் கொள்கலன்களை ஏற்றிச்சென்ற வாகனத்திலிருந்து கண்ணாடியை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர், கண்ணாடிக் குவியலுக்கு அடியில் விழுந்து உயிரிழந்துள்ளார் என ஹீங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

ஹீங்கம மேற்கு பகுதியை சேர்ந்த 45 வயது நபரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

புதிய கட்டுமான பணிகள் நடைபெற்று வரும் இந்த ஹோட்டலில் கொள்கலன்களை ஏற்றிச் செல்லும் வாகனத்தில், ஏழு கண்ணாடிகளை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவரின் மீது திடீரென ஏழு கண்ணாடிகள் சரிந்து விழுந்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்ணாடிகள் சரிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்ததொழிலாளிதங்கல்லவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹீங்கமபொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்ளக முரண்பாடு தீவிரம்

## தமிதா, அஜித் மன்னம்பெரும விவகாரத்தில் விளக்கம்



ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்ளக முரண்பாடுகள் காணப்படுகின்றன. அதன் அடிப்படையிலேயே அஜித் மன்னம்பெருமவின் தொகுதி அமைப்பாளர் பதவி நீக்கப்பட்டுள்ளது. தமிதா அபேரத்னவின் பெயர் இறுதி நேரத்தில் நீக்கப்பட்டமை நியாயமற்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனை தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

அஜித் மன்னம்பெரும விவகாரம் கட்சியின் உள்ளக பிரச்சினையாகும். அவரது தொகுதி அமைப்பாளர் பதவி எதற்காக பறிக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. ஆனால், வேட்புமனு தாக்கலின் பின்னரே இந்தசம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் கட்சி தலைவர் மற்றும் செயலாளரின் நிலைப்பாட்டை கோர வேண்டும்.

தமிதா ஆபரத்னவுக்கு வேட்புமனு இடமளிக்குமாறு கட்சி தீர்மானித்திருந்த நிலையில், இறுதிக் கட்டத்தில் எதற்காக அந்த தீர்மானம் மாற்றப்பட்டது என்பதும் எனக்கு தெரியாது.

எனினும், இது அநீதியாகும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே கட்சி இந்த விவகாரம் தொடர்பில் ஆராயும் என்று எதிர்பார்க்கின்றோம்.

சம்பிகரணவக்கவின் கட்சியில் வேட்பாளர்களைக் களமிறக்குவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகவே அவர் விலகினார் என்பதே நான் அறிந்த காரணியாகும். தயாசிறி ஜயசேகரவின் பெயர் குருணாகல் வேட்புமனு பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதும் தெரியாது. - என்றார். (05)

# வீதியில் விழுந்த நபர் கார் மோதி உயிரிழப்பு

ஹெட்டிப்பொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட துத்திரிபிட்டிகம பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹெட்டிப்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

நுகவெல பிரதேசத்தை நோக்கிப் பயணித்த கார் ஒன்று வீதியில் விழுந்து கிடந்த நபர் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, வீதியில் விழுந்து கிடந்த நபர் காயமடைந்துள்ள நிலையில் ஹெட்டிப்பொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஹெட்டிப்பொல திக்கலகெதர பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, காரின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹெட்டிப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# யாழ்ப்பாணம் – வல்வை பாலம் அருகில்; விபத்து

## ஒருவர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம்-வல்வைபாலத்துக்கு அருகில் சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிள் மற்றும் பட்டா வாகனம் ஓட்டோ என்பன மோதுண்டு குறித்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதேவேளை, ஓட்டோ சாரதி வாகனத்துடன் தப்பிச்சென்ற நிலையில் பட்டா வாகன சாரதியை பொலிஸார் கைது செய்தனர்.

உயிரிழந்தவர் அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 40,494 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 17,159 ஆகும்.

இந்நிலையில், கொழும்பு மாவட்டத்திலிருந்து 10,150 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.10.2024இல் வெளியிடப்பெற்றது